நாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அவை சரியாக வருமா என்பது வேறு பிரச்னை. ஆனால் அங்கு கண்டுபிடிக்கப்படுகிற பல ஆராய்ச்சிகள் தமிழ்நாட்டிலும் இங்கு இருப்பவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு பயன் படுத்தப்பட்டு வருகிறது.

திரு. கோவை செழியன் : வேளாண்மைத்துறையில் விஞ்ஞான மேல் படிப்பிற்கு மேல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டு பின்பு அவர்கள் திரும்பி வருகிறபோது அரசாங்கமோ, பல்கலைக் கழகமோ சில நேரங்களில் அவர்களுக்கு தகுதியான வேலை தரமுடியாமல் போய்விட்டது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அது வேளாண்மைத் துறை யில் மாத்திரமல்ல. பல்வேறு துறைகளில்கூட அப்படி அனுப்பப்பட்டவர் களுடைய பயிற்சி இங்கு பயன்படாத காரணத்தால் இப்போது அனுப்பப் படுகிற நேரத்தில் பரிசீலனை செய்து அனுப்பப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether any ryots have been deputed to other nations, so as to study the conditions of agriculture there ?

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம்: அப்படி இல்லை.

திரு. கு.அ. பொம்மன் : மைசூர் மாநிலத்தில் ஜப்பான் நிபுணர்கள் வந்து வேளாண்மைத் துறையில் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதில் நல்ல வருவாயும் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, நம் மாநிலத்திலும் இதுபோல் ஜப்பானிய முறைகளை மேற்கொண்டு நமது வேளாண்மைத் துறையை முன்னுக்குக் கொண்டுவர அவர்களின் உதவியைப் பெறுவார்களா ?

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம் : தற்சமயம் பல்வேறு பகுதி களில் இருந்தும் தமிழ்நாட்டிற்கு வந்து இங்குள்ளவற்றைப் பார்வையிட்டு தமிழ் நாட்டில் வேளாண்மைத்துறையில் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளை எல்லாம் பாராட்டி இதை தங்களுடைய பகுதிகளுக்கும் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லிவிட்டு சென்றிருப்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளியில் கலவை உரக்கிடங்கு

* 505 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி நகரசபையில் இயந்திரச் சாதன அமைப்புள்ள கம்போஸ்ட் உர டெப்போ ஒன்றை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

[1973 மார்ச் 24

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

முற்பகல் 10.00

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, திருச்சி நகராட்சி இப்போது கம்போஸ்ட் உரம் தயாரிக்கும் இடம் அரியமங்கலம், பொன்மலை போன்ற குடியிருப்புப் பகுதிகளில் இருக்கிறது. அதனால் சுகாதாரம் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது. ஆகவே, அதை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி திருச்சிராப்பள்ளி நகரசபையின் இயந்திரச்சாதன அமைப்புள்ள கம்போஸ்ட் உர டெப்போ பற்றியதாகும். எனவே அது தனியாகக் கேட்கப்பட வேண்டிய கேள்வி. அப்படிக் கேள்வி கேட்டால் பதில் சொல்ல வேண்டியவர்கள் உள்ளாட்சித்துறை அமைச்சர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

மதராஸ் அலுமினியம் கம்பெனியை நாட்டுடைமை ஆக்க வேண்டுமென்ற மாநில அரசின் கருத்துக்கு மத்திய அரசு இணங்காதது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. என். கே. பழனிச்சாமி அவர்கள் 42-வது விதியின்கீழ் இப்பேரவையை ஒத்திவைக்கக்கோரி கீழ்க் கண்ட பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள்;—

" Grave situation arising due to the non-agreeing to the proposal of the Tamil Nadu Government by the Central Government to nationalise the Madras Aluminium Company. "

இது எப்படி 42-வது விதியின்கீழ்வரும் என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.